RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2226

# பாலைத்திணையில் வழிபாட்டு மரபுகள்

**இரா. திலகவதி** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி (நிலை-1), விருத்தாசலம்-606001, தமிழ்நாடு, இந்தியா

# Traditions of Worship in Paalaitthinai

**R. Thilagavathi** [a, *]

[a] Department of Tamil, Thiru Kolanjiappar Government Arts College (Grade-I), Vriddhachalam-606001, Tamil Nadu, India

* Corresponding Author: rathimela24620@gmail.com

Received: 05.09.2022
Revised: 30-10-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

The social practice of religion and worship has continued from prehistoric times to the present day. It involves the initial stages of life in which the universe has operated from time immemorial. Ancestor worship is an expression of the fact that the present follows the past through its memories. They have performed worship as a symbol of the faith that forms the foundation of the ancient people. They had worshipped Goddess Kotravai as the inspiration for their victory. Moreover, they had performed the worship of the Sepulchral Stone for the dead, the sword worship that was the cause of victory, the worship of nature as a result of fear, and the worship of the dead on the basis of the soul.

**Keywords:** Tholkappiyam Eluthathikaram, Numbers, Alphabets, Sangam Literature

## முன்னுரை

மக்கள் ஒன்றிணைந்து வாழ தலைப்பட்ட நிலையில் ‘சமூகம்’ என்ற கட்டமைப்புத் தோன்றியது. தொடக்கத்தில் வேட்டுவர் சமூகமாக இருந்து, பின்னர் வேளாண் சமூகமாக மாறிய இம்மக்களின் தெய்வ வழிப்பாட்டுச் சிந்தனைகள் பற்றி உலகெங்கிலும் உள்ள ஆய்வாளர்கள் தனது ஆய்வுரைகளில் குறிப்பிட்டுள்ளனர். சமுதாய வாழ்வியலில் போற்றத்தக்க வகையில் அவர்கள் செய்யும் தொழில், மக்களின் பழக்கம், அன்றாட வாழ்க்கைமுறை, சமூக நடைமுறைகள், நம்பிக்கைகள், வழிபாடுகள் போன்ற அமைப்புக்கு பாலை நில மக்கள் முற்றிலும் மாறுபட்டவர்களாகத் திகழ்கிறார்கள்.

## வழிபாடு

தெய்வ வழிபாடு தொன்றுதொட்டு மக்களிடையே வேரூன்றி வந்துள்ள ஒரு பண்பாகும். மனித சக்திக்கு மேற்ப்பட்ட மற்றொரு சக்தி உலகை ஆட்டிப்படைப்பதாக அவர்கள் கருதினர். உலகில் நிகழும் நன்மைக்கும், தீமைக்கும் முதற்காரணமாக இருப்பது தெய்வ சக்தியே என எண்ணியதால், எந்த செயலிலும் முதலில் தெய்வத்தைப் போற்றும் பண்பை மேற்கொண்டனர். மக்கள் தங்கள் வாழ்வு சிறக்க, தாங்கள் எண்ணியக் காரியம் இனிது முடியவும் வேண்டி கடவுளிடம் வரம்வேண்டியும் பாலைநில எயினர்கள் வெற்றிப் பொருட்டு பலி முதலியன தூவிக் கொற்றவையை வேண்டுகின்றனர்.

மறவர்கள் கொற்றவையை தொழுது அவர்களுக்கு பலி கடன்களைச் செலுத்தியுள்ளனர்.. அப்பொழுது அவர்கள் காப்பாக தங்கள் கையில் நூலைக் கட்டிக் கொள்வதும் உண்டு. குருதிப்பலி கொடுப்பதும் வழக்கமாக இருந்துள்ளது. இதனை,

“விடர்முகை அடுக்கத்து விரல்கெழு சூலிக்குக்

கடனும் பூணாம்: கைந்நூல் யாவாம்

புள்ளும் ஓராம் விரிச்சியு நில்லாம்”

பாலைநில மக்கள் போருக்கு செல்லும்முன் போரில் வெற்றிப்பெற வேண்டி தன் குலதெய்வமான கொற்றவைக்கு குருதி பலியிட்டு, மயிற் பீலி சூட்டி வழிபட்டுச் செல்லுவர். பதுக்கை (நடுகல் வழிபாடு) இறந்தவர்களுக்கு நடுகல் வைத்து வழிபட்டும் உள்ளனர்.

## தெய்வம் (கொற்றவை)

தமிழர் தம் தொல் இலக்கண நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் கொற்றவை நிலையாகக்

“கொற்றவர் செங்குருதி யாடற்கு வாள்சேர்ந்த

கொற்றவை மற்றிவையுங் கொள்ளுங்கொன் - முற்றியோன்

பூவொடு சாந்தம் புதையவி நெய்ந்நறைத்

தேவொடு செய்தாய் சிறப்பு” பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும் ப. 38

பெண் தெய்வ வழிபாடு குறிப்பிடப்பட்டுள்ளது.

போருக்குச் செல்வோர் கொற்றவையின் பெருமைகளைக் கூறி அத்தெய்வத்தை வழிபட்டுச் சென்றுள்ளனர். கொற்றவை சங்க மறவர்களால் போர்த் தெய்வமாகக் கொண்டாடப்பட்டதை,

“வெற்றி வெல்போர்க் கொற்றவை”

கொற்றவை வழிப்பாட்டைச் சித்தாரிக்கும் நூற்பகுதிகளிலிருந்து இத்தெய்வ வழிபாடு வெறியாட்டத்துடன் நடைபெற்றது என்பதை அறியமுடிகிறது (Sami Chidambaranar, 2013). நெடுநல்வாடையில் போருக்குத் தலைவனைச் செலவுவிடுத்த தலைவியின் தோழி தலைவன் வெற்றியுடன் மீளவேண்டுமென்று வெற்றித் தெய்வத்தை வணங்குகிறாள் என்பதை,

“புலம்பொடு வாpயும் நலம்கிளர் அறிவைக்கு

இன்னா அரும்படர் தீர விறல் தந்து

இன்னே முடிக தில் அம்ம”

கொற்றவை வழிபாட்டு நிலையாக அறியமுடிகின்றது.

போரில் வெற்றிபெற்ற வீரர்கள், மார்பில் விழுப்புண்ணை திறந்து தரும் குருதியைப் பலியாக ஏற்றுக்கொள்பவள் கொற்றவை. இக்கொற்றவைக்கு குருதிப் பலியை அளிப்பதற்கு ஒரு கட்டிலுண்டு அதன் மீதிருந்தே வெற்றிவீரர் குருதிப்பலி கொடுத்து உள்ளனர். இப்பலியினால் கிடைக்கும் சக்தி தமது அரசனை சென்றடையும் என்னும் நம்பிக்கை இதற்குக் காரணம் ஆகும் என்பதே அவர்களின் நம்பிக்கையாக இருந்ததுள்ளது.

மன்றங்களிலும், வெறியாடும் களங்களிலும் வழிபடும் தெய்வங்களுக்கு குருதிப்பலியும் செய்கின்றனர். அரிசியினை பலியாக சிதறுதல், ஆட்டுமறியை அறுத்தல், மறியின் குருதியைச் சோற்றுடன் கலந்து திரளையாகச் செய்து பலி தூவுதல், கள் வைத்தல் முதலியன உண்டு. பலியிடுவதற்கு பலி பீடமும், அமைக்கப்பட்டிருந்தது. இதனை,

"மணிப்புறாத் துறந்த மரம்சோர் மாடத்து

எழுதுஅணி கடவுள் போகலின் புல்லென்று

ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன் திணைப்

பால்நாய் துன்னிய பறைக்கட் சிற்றில்"

என்னும் அகநானூற்று பாடல்வழி அறியமுடிகிறது (Venkatasami Nattar, 2001). மேலும் விழாக்காலங்களில் குயவன் கள்ளும் மற்றும் இடும் பலிகளும் மன்றத்துத் தெய்வத்திற்கு இட்டு வணங்கும் வழக்கமும் உண்டு என்பதை,

"மணிக்குரல் நொச்சி தொpயல் சூடி

பலிக்கல் ஆர்கைப் பார்முது குயவன்

இடுபலி நுவலும் அகன்தலை மன்றத்து

விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்

நற்றிணைப் பாடல் மூலம் காணமுடிகிறது.

பலியிடும் பொழுது மந்திரங்களை உச்சரிப்பதும் பல இசைக்கருவிகளை இசைத்து வழிபடுதலும் இவர்களின் மரபாக இருந்துள்ளது.

ஆறலைக் கள்வர்கள் என்று கருதப்படும் எயினர்கள் வணங்கும் கடவுளாக கொற்றவை சித்திகரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பாலை நிலத்தில் வாழ்வோராகவும் வழிப்பறி செய்வோராகவும் கொள்ளை அடிப்போராகவும் சங்கப்பாடல்களில் பதிவுகள் உள்ளன. பழங்கால வேட்டைத் தெய்வமே கொற்றவை என்க குறிப்பிடப்படுகிறது. கொற்றவை வழிபாடு ஒருவிதச செவ்வியல் பண்போடு எனும் பெயரில் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றதற்கு வலுவான சமூகவியல் காரணங்கள் உண்டு. புராதன வேட்டைச் சமூகத்து தலைமையில் நிகழ்த்தப்பட்டதற்கான சான்றுகள் உண்டு என்பதை,

"இடுமுள் வேலி எயினர்கூட் டுண்ணும்

நடுவூர் மன்றத் தடிபெயர்த் தாழக்

கல்லென் பேரூர்க் கணநிலை சிறந்தன

வல்வில் எயினர் மன்று பாழ்பட்டன

மற்ககுடி போலவிந் தடற்கனிக் எயினரும்

கலையமர் செல்வி கடண்ணி னல்லது

சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்" (Ilampuranar, 2000)

என்னும் செய்தி எயினர்க்குரிய வழிபாடாக சிலப்பதிகார வேட்டுவரியில் காணமுடிகிறது.

## பதுக்கு-பதுக்கை

பாலைநிலப் பகுதியில் வழிப்போக்கர்கள் ஆறலைக் கள்வான் அம்புக்கு பலியாகின்றனர். அவர்களது உடலைக் கற்குவியலால் மூடிவைக்கின்றனர். இக்கற்குவியல் பதுக்கு என்று குறிப்பிடப்படுகிறது. பதுக்குகளின் மீது காட்டுமல்லிக் கொடி படர்ந்து காணப்படும் காட்சியை அகநானூறு

"சிலைஏ றட்ட கணைவீடி வம்பலர்

உயர்பதுக்கு இவர்ந்த தகர்கொடி அதிரல்

நெடுநிலை நடுகல் நாட்பலி கூட்டும்" (Venkatasami Nattar, 2001)

என்று குறிப்பிடுகிறது.

உயர்பதுக்கு என்பதால் சற்று உயரமான கற்களால் பதுக்கு அமைக்கப்பட்டுள்ளது தொரpயவருகிறது. கற்குவியலால் ஆன பதுக்கையின் நிழல் தேடி அது கிடைக்காமையால் நாம் ஒன்று வருந்தும் நிலையை, நற்றிணையில்

"உண்டல் அளித்துஎன் உடம்பே விறல்போர்"

பாலை நிலத்தில் ஆறலைக் கள்வர்களால் கொல்லப்பட்ட வழிப்போர்க்களுக்கான பதுக்கைகளும், அவற்றில் மேலிடப்பட்ட தழைகளும் இடுமுள் வேலி போல்அணியணியாய் காட்சித் தரும் என்பது கலித்தொகை தரும் செய்தி (Kailaasapadhi, 2010).

பதுக்கைகளை கொண்ட பாலைநில வழி பாழ்பட்ட வழியாகவும் வழிப்போக்கர்களுக்கு அச்சம் தருவதாகவும் காட்சியளித்தது. இறந்தோரின் ஆவி குறித்த நம்பிக்கையை இவ்வச்சத்திற்குக் காரணம் எனலாம்.

பதுக்கை கற்களில் ஆவி உறைவதாக நம்பியதால் அதை கடவுளாக வழிப்பட்டுள்ளனர் பதுக்கையில் உறையும் கடவுளுக்கு மயிற்பீலி சூட்டி, துடி என்னும் இசைக்கருவியை இசைத்து நெல்லிலிருந்து வடிந்த கள்ளைப் படையாலாகப் படைத்து, செம்மறியாட்டுக் குட்டியைப் பலி கொடுத்து வணங்கிய காட்சியை அகநானூறு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"வல்லாண் பதுக்கைத் கடவும் மேண்மார்

நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்

தோப்பி கள்ளொடு துரு உப்பிலி கொடுக்கும்" (Venkatasami Nattar, 2001)

வீரரொருவனுக்கு நடுகல் நாட்டியதுடன் அவனை மறந்து விடவில்லை. நடுகல்லை மயிற்பீலியாலும், மாலையாலும் அலங்கரித்து, படையலாகக் கள்ளை வைத்து. உயிர்ப்பலி கொடுத்து வழிப்பட்டுள்ளனர். இறந்த வீரனின் ஆவி அக்கல்லில் உறைகிறது என்ற நம்பிக்கையே இவ்வழிபாட்டிற்கான அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது.

## நடுகல் வழிபாடு

பதுக்கைகளைப் போன்றே நடுகற்களும் பாதையோரங்களில் அமைந்துள்ளன. அவற்றில் நடுகல்லுக்குரிய வீரனின் பெயர் பொறிக்கபட்டிருந்தது இச்செய்தியினை,

"ஒன்னாத் தெவ்வர் உலைவு இடத்து ஆரித்தென

கள்வழிக் கொடுத்த நாணுடை மறவர்

செல்லா நல் இசைப் பெயரோடு நட்ட

கல்ஏசு கவலை எண்ணு மிகப் பலவே"

என்று மலைபடுகடாம் தெரிவிக்கின்றது.

சங்ககாலத்தில் நடுகற்கள் பரவலாக நடப்பட்டதையும், பெரிய அளவில் நடுகற்கள் இருந்தமையும் அவற்றின் மீது பெயரும் வீரச்சிறப்பும் பொறிக்கபடுவதாக சங்க இலக்கியங்களில் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

"பதுக்கை" என்பதே நடுகல்லாக வளர்ச்சிப் பெற்ற நிலையில் மறவர் அல்லது கானவர்களால் அம்பு எய்து சொல்லப்பட்டவர்களுக்கு அவர்களின் நினைவாக நடுகல் சார்த்தி அதற்கு மலர்கள் சூட்டி பீலிசூட்டி வழிப்பட்டமையை கீழ்வரும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

"நிரம்பா நோக்கின் நிறையங் கொண்மார்

நெல்லி நீளிடை யெல்லி மண்டி

நல்லமர்க் கடந்த நாணுடைமறவர்

பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்

பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்"

நடுகல் நடுவதற்கான மரபுகளாக ஆறு படிநிலைகளாக தொல்காப்பியத்தில் சுட்டப்படுகின்றன. அவை

1. காட்சி: கணியணின் துணையுடன் அளவும் அமைதியும் நோக்கிக் கல். இவ்வாறு தொந்தெடுக்கப்பட்ட பின்னர் கல்லிலே ஓர் உருவம் செதுக்கப்படும். அவ்வுருவம் சில விதிகளுக்கு ஏற்ப அமைந்திருந்தல் வேண்டும்.
2. கால்கோள்: அக்கல்லை நடுதற்குரிய நல் நிமித்தம் பார்த்தல்.
3. நீர்ப்படை: அக்கல்லை நீராட்டுதல்
4. நடுதல்: ஏற்ற இடத்தில் கல்லை நடுதல்
5. விழா: கோயிலுக்கு வேண்டிய கட்டிடங்கள் கட்டுவதும், வீரன் செயல்களை கல்லில் பொறிப்பதும் இவ்விழாவில் நடைபெறும்.
6. வாழ்த்துதல்: கல்லை வணங்குதல் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒரு மனிதனின் உயிரையிழந்தவர்கள், உயிரை பறித்தவர்கள் என்ற நிலையில் உயிரையிழந்தவர்கள் நினைவாக நடுகல் நடப்பட்டு வழிபாடு நிகழ்த்துவதை சங்ககால மக்களின் ஓர் அங்கமாக இருந்துள்ளது.

## வேட்டைச் சடங்கு

இனக்குழு மக்கள் வேட்டைக்குச் செல்லும்முன்பு, விலங்கு நடனம் ஆடி வழிபட்டுள்ளனர். அவ்வாறு நடனம் ஆடி வழிபட்டுச் சென்றால் வேட்டையில் நல்ல பலன் கிடைக்கும் என்று நம்பியுள்ளனர். இந்நடனம் வேட்டைக்குச் செல்லுமுன் ஆடப்பெற்றால் வேட்டைச் சடங்காக இருக்கும் என்றும் வேட்டையால் கிடைத்த விலங்கை விருந்தாக உண்டு களித்த பின்னர் மகிழ்ச்சியிலும் இவ்வாறு ஆடியுள்ளனர். என்பது தொாpயவருகிறது.

## வாள்வழிபாடு

மறவர்கள் குலத்தில் நடைபெற்ற திருமணத்தில் வாள் வழிபாடு பொருளாக அமைந்துள்ளது. மறவர்களுக்க வரந்தருவது வாள் என்னும் நம்பிக்கையில் இச்சடங்கு நடைபெற்றுள்ளன. வாளைப் புனிதப் பொருளாகக் கருதி வழிபாடாற்றும் சடங்காகக் கொள்ள இடமுண்டு. மறக்குலத்திற்கு 'வழிவளத்தைத் தப்பாமல் பெற்றுக் கொடுக்கும வாளில் தெய்வம் உறைவதாக நம்பியுள்ளனர். இதனால் இச்சடங்கு நடைப்பெற்றிருக்க வேண்டும்.

## இயற்கை வழிபாடு

ஆவி குறித்த நம்பிக்கை அணங்கு என்ற தெய்வமாக வளர்ச்சியடைந்ததன் தொடர்ச்சியாக அணங்கு உறைவதாக நம்பும் மக்கள் இயற்கையை வழிபட்டுள்ளனர். தெய்வம் உறைவதாக, தாம் நம்பிய வேப்பமரத்திற்குக் கொடுத்த பசுமாட்டைக் கொன்று அதன் குருதியைத் தூவி வழிப்பட்டதை

"தெய்வம் சேர்ந்த பராரை வேம்பிற்கு

கொழுப்பா எறிந்து குருதி தூஉய்"

என்று அகநானூறு குறிப்பிடுகிறது.

இயற்கைப்பொருள் வழிபாடு என்பது ஆவி குறித்த நம்பிக்கையின் வளர்ச்சியே என்பது இச்செய்திகளால் அறியமுடிகிறது.

## முடிவுரை

பண்டையத் தமிழர்களான முன்னோர்களின் அடிச்சுவடைப் பின்பற்றியே தமிழ்ச்சமூகத்தில் கொற்றவை வழிபாடு, இறந்தோருக்கான நடுகல் வழிபாடு, ஆவி குறித்த நம்பிக்கையினை மையமாக்க கொண்டு வழிபாடு உருவாகியுள்ளது. இவ்வழிபாட்டு முறைகள் தமிழhpன் பண்பாட்டு வாழ்வியலில் ஆழமாக ஊடுருவி நிற்கின்றது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

## References


Ilampuranar, (2000) Tholkappiyam Porulathikaram Moolamum Uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India

Kailaasapadhi, K. (2010) PandaI Tamizhar Vaazhvum Vazhipadum, Kalachuvadu Publications, Nagercoil, India

Sami Chidambaranar, (2013) Paththupaatum Pandaith Thamizharum, Amizhtham Pathipakam, Chennai, India

Venkatasami Nattar, N.M. (2001) Akananuru Moolamum Uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License